DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.3

Name : **திரு.பாசித் ரகுமான்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 19.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் கோவையில் தற்போது இன்ஜினியரிங் படித்துவிட்டு சேல்ஸ் மேனேஜராக 4-5 வருடங்களாக தங்கி வேலை செய்து வருகிறேன். தற்போது நான், எனது பாட்டி உபைதா மற்றும் எனது சகோதரி நிஷா பானு ஆகியோர்களுடன் ஒன்றாக குடியிருந்து வருகிறேன். 2018 லிருந்து 2021 வரைக்கும் கோயம்புத்தூரில் உள்ள RVS கல்லூரியில் நான் தங்கி படித்துக் கொண்டிருந்தேன். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நான் விடுமுறை காலங்களில் ஊருக்கு வருவேன்.

2. பிப்ரவரி 2019 ஆம் வருடம் எனது அப்பாவை நான் நேரில் பார்க்கும்போது 1 மற்றும் 2 எதிரிகள் போனில் பேசிக் கொள்கிறார்கள் என்றும், அவர்கள் நடவடிக்கை சரியல்ல என்றும் என்னிடம் தெரிவித்தார்கள். அதன் பிறகு மூன்று மாதங்கள் கழித்து தனக்கு உடல்நிலை சரியல்லை என்றும் உணவு அருந்தும்போது அவருக்கு டேஸ்ட் தெரியவில்லை என்றும், எனது தங்கையிடம் சாப்பாட்டில் ஏதோ கலந்திருப்பதாக தெரிவித்திருந்தார். சம்பவத்திற்கு 3, 4 மாதங்களுக்கு முன்பு எனது அம்மாவுக்கு எதிராக எனது மாமா புகார் தெரிவித்திருந்தார். அந்த வழக்கு தொடர்பாக காவல் நிலையத்தில்

எனது அம்மா எங்கள் மூவரையுமே வேண்டாம் என எழுதி கொடுத்திருந்தார், அந்த காரணத்தினால் நான் எனது அம்மாவுடன் அதன் பிறகு பேசுவது கிடையாது.

3. எனது அப்பா இறந்த அன்று நான் கோயம்புத்தூரில் இருந்து வந்து விட்டேன். எனது அம்மா வீட்டில் இல்லை, எனது அப்பா இறப்பதற்கு முன்பு எனது அம்மா கிளம்பி விட்டதாக தெரிவித்தார்கள். எனது பாட்டியிடம் தான் நான் இது பற்றி விசாரித்தேன். எனது அம்மா யாரும் தனக்கு தேவையில்லை என சொல்லிவிட்டு கிளம்பியதாக எனது பாட்டி தெரிவித்தார். அதன் பிறகு எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. எனது அப்பாவின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக நாங்கள் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தோம்.இது தொடர்பாக உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என்னை விசாரிக்கும் போது நான் வாக்குமூலம் அளித்துள்ளேன். அந்த வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ.4 . ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை, சாட்சி விசாரணை 04.11.2025–ம் தேதியன்று உத்தரவிடப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் அவகாசம் வழுங்கப்படும் இன்று எதிரிகள் தரப்பு வழக்கு ஆஜரில்லை என்பதால் என்பதால் இலவச சட்ட உதவி மையத்திலிருந்து இலவச சட்ட உதவி வழக்கறிஞரை (LADCS) எதிரிகளுக்கு நியமிக்கப்பட்டு <u>இலவச சட்ட உதவி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)</u>**

1. எனது அப்பா இரண்டு மூன்று வருடங்களாக TB நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் அதன் பிறகு அவர் நல்ல நிலையில் உடல் தேறி நன்றாக தான் இருந்தார். எனது அப்பா TB நோய்க்காக மருந்து மாத்திரைகள் எடுத்து வந்தார் என்றால் சரியல்ல, இறப்பதற்கு 2, 3 வருடங்களாக எந்த மாத்திரையும் எனது அப்பா எடுக்கவில்லை என்றும், எனது அப்பாவின் நோய் சரியாகிவிட்டது. TB நோய் என்பது ஒரு உயிர் கொல்லி நோய் என்றும், நோயின் வீரியத்தை

பொறுத்து ஒரு வேலைக்கு 5 முதல் 8 மாத்திரைகள் வரை சாப்பிட வேண்டும் என்றால் சரியல்ல. எனது அப்பா முதல் கட்ட TB– யில் இருந்தார் என்பதால் அவருக்கு நோய் குணமாகிவிட்டது. எனது அப்பா இறப்பதற்கு முதல் நாள் வரை மாத்திரை, மருந்துகளுடன் தான் சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு அதில்லாமல் குடிப்பழக்கம் இருந்ததென்றால் சரிதான். மாத்திரை, மருந்துகள் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டு குடிப்பழக்கமும் இருந்த காரணத்தினால் தான் எனது அப்பா இறந்து போனார் என்றால் சரியல்ல.

2. எனது அப்பா இறப்பதற்கு முன்பாகவே படுத்த படுக்கையாக தான் இருந்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா இறப்பதற்கு ஆறு மாதம் ஒரு வருடத்திற்கு முன்பே எதிரிகள் இருவரும் பழகி வந்தார்கள் என்ற விபரத்தை என்னிடம் தெரிவித்திருந்தார், அதன் பிறகு எனது அப்பா அவர்கள் குறித்து எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, வீட்டில் பிரச்சனை இருப்பதாக அடிக்கடி சொல்வார். எனது அப்பா இறந்ததாக யார் எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் எனது மாமா ஜெய்லானி தான் எனக்கு தகவல் சொன்னார், உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக சொல்லி என்னை வர சொன்னார்.

3. எனது அப்பாவின் நோய் வீரியம் கூடுதலாக இருந்த காரணத்தினால் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும், எனது அம்மாவுக்கும், மாமாவுக்கும் இடையே இருந்த பகை காரணமாக அவர்கள் என்னிடம் பொய்யான காரணங்கள் சொல்லி அதற்கேற்றார் போல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மாமா மற்றும் பாட்டிக்கு ஆதரவாக நான் தற்போது சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு தொடர்பாக எந்த விஷயமும் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருக்கும் போது எனது பாட்டி, சகோதரி, நான் ஆகியோர்கள் எனது அப்பாவுடன் ஒன்றாக தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது அம்மா மற்றும் பாட்டி தான் எனது அப்பாவின் தேவைகளை ஒன்றாக கவனித்து

வந்தார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு உடல்நிலை மிகவும் மோசமாக இருந்த காரணத்தினால் தான் அவர் ஏற்கனவே பார்த்து வந்த எலுமிச்சை வியாபாரத்தை அவரால் தொடர்ந்து பார்க்க இயலவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.19 15:57:33 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.